DEPOSITION OF WITNESS

IN THE COURT OF II ADDITIONAL DISTRICT JUDGE, THOOTHUKUDI.

Case No. O.S. No.176/2022

Plaintiff side witness for P.W.2

| | | | |
|---|---|---|---|
| Name | ...திரு. மைக்கேல் அந்தோணி பெனடிக்ட் | Caste | ... |
| Father's/ Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **12.02.2026**

<u>முதல்விசாரணை:-</u>

நான் அங்கமங்கலம் கிராம நிர்வாக அலுவலராக பணியாற்றி வருகிறேன். நீதிமன்றத்திலிருந்து எனக்கு அனுப்பப்பட்ட அழைப்பாணை பெற்று அழைப்பாணையில் கோரப்பட்டுள்ள ஆவணங்களின் அசலுடன் சாட்சியமளிக்க வந்துள்ளேன். அங்கமங்கலம் கிராம சர்வே எண். 19A/9 க்கான வாதியின் தந்தை முத்துசாமி என்பவர் பெயரில் உள்ள அ பதிவேடு சா.சா.ஆ-1, அங்கமங்கலம் கிராம சர்வே எண். 25/1ஏ-க்கான வாதியின் தந்தை முத்துசாமி என்பவர் பெயரில் உள்ள அ பதிவேடு சா.சா.ஆ-2, அங்கமங்கலம் கிராம சர்வே எண். 4/2பி, 6/2, 5/1 -க்கான வாதியின் தந்தை முத்துசாமி என்பவர் பெயரில் உள்ள அ பதிவேடு சா.சா.ஆ-3, அங்கமங்கலம் கிராம சர்வே எண். 66/1பி, 66/2சி-க்கான வாதியின் தந்தை முத்துசாமி என்பவர் பெயரில் உள்ள அ பதிவேடு சா.சா.ஆ-4, அங்கமங்கலம் கிராம சர்வே எண். 9-க்கான வாதியின் தந்தை முத்துசாமி என்பவர் பெயரில் உள்ள அ பதிவேடு சா.சா.ஆ-5 ஆகும்.

<u>குறுக்குவிசாரணை (1, 3 பிரதிவாதிகள்தரப்பில்)</u>

முத்துசாமி என்பவர் பெயரில் உள்ள இதர சொத்துக்கள் எல்லாம் அவரது மூத்த மகன் சிவசுப்பிரமணியன் என்பவர் பெயரில் மாறியுள்ளது என்றால் மேற்சொன்ன சொத்துக்கள் சிவசுப்பிரமணியன் என்பவர் பெயரில் மாறியுள்ளது. மேற்சொன்ன சொத்துக்களை தவிர முத்துசாமிக்கு வேறு சொத்துக்கள் உள்ளது என்றால் அங்கமங்கலம் கிராமத்தில் இல்லை. மற்ற கிராமத்தில் உள்ள சொத்துக்களை பற்றி எனக்கு தெரியாது என்றால் சரிதான். சிவசுப்பிரமணியன் பெயரில் எந்த வருடம் மாறியுள்ளது என்றால் 2001-2002. அது தாசில்தார் அலுவலகத்தில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவின்பேரில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது

என்றால் சரிதான். மேற்படி உத்தரவை பார்த்தால்தான் எதன் அடிப்படையில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது தெரியவரும் என்றால் சரிதான். பொதுவாக தாசில்தார் அலுவலகத்தில் பெயர் மாற்றம் செய்வதற்கு தேவையான ஆவணங்கள் இருந்தால் மட்டுமே பெயர் மாற்றம் செய்து உத்தரவு பிறப்பிப்பிப்பார்கள் என்றால் சரிதான். மேற்படி பெயர் மாற்ற உத்தரவை கொண்டு வர அழைப்பாணையில் கூறப்படவில்லை என்றால் சரிதான்.

குறுக்குவிசாரணை 2 ம் பிரதிவாதிதரப்பில் இல்லை என சொல்லப்பட்டது.